பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

13 06 2026 SATURDAY 6 30 PM

வணக்கம்-மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1) விளையாட்டு மற்றும் உடற்கல்வியை, கல்வித் திட்டத்தோடு இணைக்க தேசிய கல்விக் கொள்கை வழிவகுத்துள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

2) தமிழகத்திற்கு நீட் தேர்விலிருந்து விலக்குப் பெற வேண்டும் என்பதில் மாநில அரசு உறுதியுடன் இருப்பதாக உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. விஸ்வநாதன் கூறியுள்ளார்.

3) Green Magic பால் பாக்கெட் தடையின்றி விநியோகிக்கப்பட்டு வருவதாக ஆவின் நிறுவனம் தெரிவித்துள்ளது.

4) காவிரி நீரை பெறுவதற்கும், மேகதாது அணை கட்டுவதை தடுக்கவும் மாநில அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

5) இந்தியாவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் ஆப்கானிஸ்தான் தற்போது பேட் செய்து வருகிறது.

>>>>>><<<<<<

விளையாட்டு மற்றும் உடற்கல்வியை, கல்வித் திட்டத்தோடு இணைக்க தேசிய கல்விக் கொள்கை வழிவகுத்துள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம், போபாலில் துப்பாக்கி சுடுதல் பயிற்சிக் கல்லூரி மாணவர்களிடையே உரையாடிய அவர், விளையாட்டுத் துறையில் சாதனை படைக்கும் வீரர்கள், ஐ.ஐ.டி. உள்ளிட்ட பெருமைமிகு கல்வி நிறுவனங்களில் சேருவதற்கு தற்போது வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதாவும் தெரிவித்தார்.

>>>>>><<<<<<<

தமிழகத்திற்கு நீட் தேர்விலிருந்து விலக்குப் பெற வேண்டும் என்பதில் மாநில அரசு உறுதியுடன் இருப்பதாக உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

திருவாரூரில் மாவட்ட அளவிலான திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நீட் தேர்வில் வினாத்தாள் வெளியானது போன்ற பல்வேறு பிரச்சினைகளால் மாணவர்கள் பாதிப்புக்குள்ளாவதாக தெரிவித்தார்.

இந்த தேர்வினால், பல ஆண்டுகளாக மாணவ மாணவியர் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழக உயர்கல்வித்துறை ஊழலற்றதாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் செயல்படும் என்றும் அமைச்சர் திரு. விஸ்வநாதன் கூறினார்.

>>>>>><<<<<<<

மாநில அரசின் நலத்திட்ட உதவிகள், இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக பயனாளிகளுக்கு சென்றடைவதை மாநில அரசு உறுதி செய்துள்ளதாக கைத்தறி துறை அமைச்சர் திரு விஜய் பாலாஜி தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரும் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கான விலையில்லா வேட்டி சேலை வழங்குவதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்தார். பருத்திக்கான சரக்கு மற்றும் சேவை வரி குறைக்கப்பட்டுள்ளது, விவசாயிகளுக்கு பேருதவியாக உள்ளது என்றும் அவர் கூறினார். விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தில் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்படும் என்றும் அமைச்சர் திரு. விஜய் பாலாஜி தெரிவித்தார்.

>>>>>><<<<<<<

தமிழகத்தில், சிறுபான்மை மக்களின் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்கள் நடப்பாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் இடம்பெறும் என்று மாநில சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. ஷாஜஹான் தெரிவித்துள்ளார்.

விருதுநகரில் நடைபெற்ற மாவட்ட அளவிலான சிறுபான்மையினர் நல திட்டங்கள், வக்ஃப் வாரியங்கள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர்,

சிறுபான்மையினருக்கான நலத்திட்டங்களை செயல்படுத்த கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், இஸ்லாம் சமுதாயத்தைச் சேர்ந்த ஆதரவற்ற மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள 160 பெண்கள் சுயதொழில் தொடங்குவதற்கு 15 லட்சத்து 78 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான உதவித்தொகை, விலையில்லாத தையல் இயந்திரங்கள் மற்றும் சலவைப் பெட்டிகளையும் அவர் வழங்கினார். உலமாக்கள் நலவாரிய அட்டைகளையும் அமைச்சர் திரு. ஷாஜஹான் வழங்கினார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் தற்போது மின்சார பற்றாக்குறை இல்லை என்று தமிழ்நாடு மின் பகிர்மான கழக இயக்குநர் டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம், தச்சூர் துணை மின்நிலையத்தை பார்வையிட்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மின்உற்பத்தியிலும், மின்விநியோகத்திலும் எவ்வித பற்றாக்குறையும் இல்லை என்று தெரிவித்தார்.

20 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட பழைய மின் கம்பங்கள், புதைவட கேபிள்கள் மற்றும் மின்மாற்றிகள் பழுதடைந்துள்ளதால், சில பகுதிகளில் அவ்வப்போது மின்தடை ஏற்படுவதாகவும், மின்வாரியப் பணியாளர்கள் உடனுக்குடன் சரிசெய்து மின்தடை நீக்கப்படுவதாகவும் அவர் கூறினார். சாலை விரிவாக்கம் மற்றும் பிற தேவைகளுக்காக தோண்டும் பணிகளின் போது, கவனக்குறைவாக புதைவட கேபிள்கள் சேதமடைந்துவிடுவதாகவும், இதனால் மின்விநியோகத்தில் பாதிப்பு ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார். இதுபோன்ற சம்பவங்களை தவிர்க்க, அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். கோடைகால உச்ச மின் தேவையை சமாளிக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். பழைய மின் கட்டமைப்புகளை படிப்படியாக மாற்றும் பணிகள் நடைபெற்று வருவதாகவும், தேவையான மின்கம்பங்கள் மற்றும் உபகரணங்கள் போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாகவும் டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

Green Magic உள்ளிட்ட பால் பாக்கெட் விநியோகத்தை நிறுத்தவோ அல்லது கணிசமாக குறைக்கவோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று ஆவின் நிறுவனம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்தி உண்மைக்கு புறம்பானது என்று கூறியுள்ளது.

நுகர்வோரின் தேவைக்கேற்ப ஆவின் நிறுவனம் தொடர்ந்து, பால் விநியோகம் செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தவறான செய்திகளை நம்பி, பொதுமக்கள் குழப்பமடைய வேண்டாம் என்றும், ஆவின் Green Magic பால் பாக்கெட் எவ்வித தடையும் இன்றி விநியோகிக்கப்படும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

காவிரியின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்ட மத்திய அரசு அனுமதி வழங்கியிருப்பதாக கர்நாடக மாநில முதலமைச்சர் திரு. D,K. சிவக்குமார் தெரிவித்திருப்பதை, மாநில சட்டத்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

தேனி மாவட்டத்தில் அரசு திட்டங்கள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர், மேகதாது அணை தொடர்பாக விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கு மட்டுமே நீதிமன்றம் அனுமதி வழங்கியிருப்பதாகவும், ஆனால், அணை கட்டுவதற்கான அனுமதி வழங்கப்படவில்லை என்றும் கூறினார்.

முல்லைப்பெரியாறு மற்றும் காவிரி நதிநீர் பிரச்சினையில் தமிழக நலன் ஒருபோதும் விட்டுக் கொடுக்கப்படமாட்டாது என்று அவர் தெரிவித்தார்.

உச்சநீதிமன்ற இதுவரை வழங்கிய தீர்ப்புகளின் அடிப்படையில் எவ்வித சமரசமும் இன்றி, நதிநீர் பங்கீடு தொடர்பான பிரச்சினைகளுக்கு மாநில அரசு தீர்வு காணும் என்றும் அவர் கூறினார். பருவமழையின்போது ஏற்படும் பேரிடர்களை சமாளிக்க தீயணைப்புத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டுப் பணிகளையும் திரு. நிர்மல் குமார் பார்வையிட்டார்.

>>>>>><<<<<<

மேட்டூர் அணை இவ்வாண்டு ஜூன் 12 ஆம் தேதி குறுவை சாகுபடிக்கு திறக்கப்படாததால், டெல்டா மாவட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த மாதம் தில்லியில் நடைபெற்ற 51வது காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில், தமிழகத்திற்கான பங்கினை பெறுவதற்கு மாநில அரசு முயற்சி எடுக்கவில்லை என்று குற்றம்

சாட்டியுள்ளார். மேகதாது அணை கட்டுவதற்கு கர்நாடக அரசு மேற்கொள்ளும் முயற்சியை தடுக்கவும், காவிரியிலிருந்து தமிழகத்திற்கான தண்ணீரை பெறுவதற்கும் மாநில அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

தமிழகத்தின் வடக்கு கடலோர பகுதிகளில் நிலவும் வளிமண்டல சுழற்சி காரணமாக, மாநிலத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் அடுத்த 24 மணி நேரத்திற்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் இடிமின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

திருப்பத்தூர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் இடிமின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. இன்றும் நாளையும் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பான அளவிலேயே இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழக கடலோரப் பகுதிகளில் பலத்த கடற்காற்று வீசக்கூடும் என்றும் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்றும் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

தருமபுரி - சேலம் தேசிய நெடுஞ்சாலை தொப்பூர் கணவாய் பகுதியில் நடைபெற்று வரும், உயர்மட்ட மேம்பால கட்டுமான திட்டப் பணிகளை தருமபுரி மாவட்ட ஆட்சியர் திரு. சரவணன், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>><<<<<<

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரின் முக்கிய அடையாளங்களில் ஒன்றான சந்திரசூடேஸ்வரர் மலைப்பகுதியில், புதுப்பிக்கப்பட்ட டெலஸ்கோப் ஹவுஸை அம்மாவட்ட ஆட்சியர் திரு. தினேஷ்குமார் திறந்து வைத்தார்.

>>>>>><<<<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு உணவு ஊட்டச்சத்துயியல், உடல் எடை சீரமைப்பு போன்றவற்றில் பயிற்சிகள்

வழங்கப்படவுள்ளதாகவும், தகுதியுள்ளவர்கள் தாட்கோ இணையதளத்தில் முன்பதிவு செய்து கொள்ளலாம் என்றும் அம்மாவட்ட ஆட்சியர் திருமதி. சினேகா தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<<

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் அருள்மிகு சங்கரநாராயணர் - கோமதி அம்பாள் திருக்கோவிலில் உள்ள கோவில் யானை கோமதியின் உடல்நலன் மற்றும் பராமரிப்பு தொடர்பாக வனத்துறையினர் மற்றும் கால்நடை மருத்துவர்கள் ஆய்வு மேற்கொண்டனர்.

>>>>>><<<<<<<

திருப்பூர் மாவட்டம், அவினாசியை அடுத்த தெக்கலூர் ஊராட்சி ஏரிப்பாளையம் ஏரியில் கேரளாவிலிருந்து ஏற்றி வந்த 7 டன் கழிவுகளை கொட்ட முயன்ற லாரியை பொதுமக்கள் சிறைபிடித்து போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

>>>>>><<<<<<<

விளையாட்டுச் செய்திகள்

இந்தியா - ஆப்கானிஸ்தான் இடையேயான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி மழை காரணமாக 25 ஓவராக குறைக்கப்பட்டுள்ளது.

முதலில் களமிறங்கியுள்ள ஆப்கானிஸ்தான் சற்றுமுன்வரை 8 ஓவரில் 3. விக்கெட் இழப்புக்கு 60. ரன் எடுத்துள்ளது.

டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்து வீச தீர்மானித்தது.

>>>>>><<<<<<<

உலக கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற்ற ஆட்டத்தில் ஸ்காட்லாந்து அணி 40 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

>>>>>>END<<<<<<<